அசல் வழக்கு 53/2021

நாள் :06.03.2025

வா.சா. : 1

பெயர் : அன்பழகன்

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

நான் 1ம் வாதி என்றாலும் 2ம் வாதி என் சகோதரர் என்றால் சரி. என் அம்மா பெயர் கலைச்செல்வி. 1ம் பிரதிவாதியின் தாயார் பெயர் அஞ்சலையம்மாள். என் தாயாரும் 1ம் பிரதிவாதியின் தாயாரும் உடன் பிறந்த சகோதரிகள் என்றால் சரி. 1ம் பிரதிவாதியின் மனைவி 2ம் பிரதிவாதி என்றாலும் 1ம் பிரதிவாதியின் மகள் மற்றும் மகன் 3, 4 பிரதிவாதிகள் என்றால் சரி. 2ம் பிரதிவாதி அன்பரசியின் சகோதரி கவியரசியை நான் திருமணம் செய்திருக்கிறேன். எந்த ஆண்டுவரை ஒற்றுமையாக இருந்தோம் என்றால் 2017ம் ஆண்டுவரை நாங்கள் ஒற்றுமையாக இருந்தோம். என்னுடன் பிறந்தவர்கள் என்னையும் சேர்த்து ஐந்து பேர் என்றால் சரி. 2017ம் ஆண்டு என்ன பிரச்சனை வந்தததது என்றால் பணம் கொடுக்கல் வாங்கலில் பிரச்சனை வந்தது. 2017க்கு பிறகு எங்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் ஒற்றுமை ஏற்படவில்லை என்றால் சரி. தாவா 3 ஐட்ட சொத்துக்களும் 1ம் பிரதிவாதி சந்திரனுக்கு சொந்தம் அவர் பெயரில் பட்டா உள்ளது. தாவா சொத்தின் அனுபவமும் சந்திரன் வசம் உள்ளது என்றால் 2017க்கு பிறகு அவர் வசம் உள்ளது. அதற்கு முன்பு வரை நான் தான் அனுபவித்து வந்தேன். சந்திரன் சென்னையில் நிரந்தரமாக வசித்து வந்தாரா என்றால் ஆமாம். 2016, 2017லிலிருந்து தாவா கிராமத்தில் 1ம் பிரதிவாதி நிரந்தரமாக வசித்து வருகிறார். தாவா சொத்தில் ஒரு சிறு பகுதியில் ஒயின்ஷாப் கட்டியிருந்தேன் என்றால் இல்லை. தாவா சொத்தில் வேறு எதாவது கட்டிடம் கட்டப்பட்டதா என்றால் இல்லை. தாவா சொத்தில் ஒயின்ஷாப்

K. அன்பழகன்

நடத்தக்கூடாது என்று பொதுமக்கள் RDO அலுவலகத்தில் மனுக்கொடுத்து பிரச்சனை நடந்தது என்றால் சரி. அதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை. இது சம்பந்தமாக நான் ஐந்து ஊர் நாட்டாமையிடம் 5 கோடி நஷ்ட ஈடு கேட்டேன் என்றால் சரியல்ல. என்னை ஒதுக்கி வைத்து விட்டு கட்டபஞ்சாயத்து நடந்தது. நான் மனஉளைச்சலுக்காக 5 கோடி நஷ்ட ஈடு கேட்டு வக்கீல் நோட்டீஸ் அனுப்பினேன் என்றால் சரி. பொதுமக்கள் ஒயின் ஷாப்ப நடத்த ஆட்சேபணை தெரிவித்து RDO அலுவலகத்தில் மனுக்கொடுத்ததற்கும் எனக்கு மன உளைச்சல் ஏற்பட்டதற்கும் என்ன சம்பந்தம் என்றால் பிரதிவாதி பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனையை இதில் கொண்டு வந்த சேர்த்தார். 2017ம் ஆண்டு என்னுடைய பணத்தை திருப்பி தருமாறு பிரதிவாதிகளிடம் கேட்டானா என்றால் ஆமாம். அவர்கள் கொடுக்கமுடியாது கோர்டில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்களா என்றால் ஆமாம். 2017ம் ஆண்டு எனக்கு பிரதிவாதிகளிடமிருந்து எவ்வளவு பணம் எனக்கு வரவேண்டும் என்றால் 16,47,037/- ரூபாய் வரவேண்டும். அந்த தொகைகள் எதுவும் நான் அனுப்பிய தொகை இல்லை என்றாலும் 2ம் வாதி குணசேகரன் வெளிநாட்டில் இருந்து அனுப்பிய தொகைகள் என்றால் சரி. இந்த தொகை சம்பந்தமாக நான் வழக்குரையில் பக்கம் 7ல் 2011 முதல் 2017 வரை 39 ஐட்டமாக காட்டியுள்ளேன் என்றால் சரி. எனக்கும் பிரதிவாதிகளுக்கும் தொகை அனுப்பியது தொடர்பாக எதாவது எழுத்துமூலமான ஒப்பந்தம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஒப்பந்தம் 2011ம் வருடம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தம் என்பது கிரய உடன்படிக்கை இல்லை என்றால் சரி போக்கிய ஒப்பந்தம். நிலத்தை போக்கியமாக வைத்து கொள்ளும்படி சொல்லி 2ம் பிரதிவாதி அன்பரசி எழுதிக்கொடுத்தார்.

அந்த போக்கிய சொத்து வழக்குரை சொத்து தான். தாவா சொத்து எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 14 மா. அந்த போக்கிய பத்திரத்தில் (வாசாஆ 3 ஆவணம்) தாவா 3 ஐட்ட சொத்து கண்டுள்ளதா அல்லது 14 மா கண்டுள்ளதா என்றால் 2 ஏக்கர் மட்டும் கண்டுள்ளது. வழக்குரையில் கண்டுள்ள தொகைகள் வாசாஆ 3 ஆவணத்தில் கட்டுப்பட்டதா என்றால் ஆமாம். வழக்குரையில் சொல்லியுள்ள தொகைகள் அனைத்தும் வங்கி பண பரிவர்த்னை மூலம் ஏற்பட்டவை என்றால் சரி. வாசாஆ 3 ஆவணத்தில் ரூபாய் 1 லட்சம் ரொக்கம் கடனாக பெற்றுக்கொண்டது என்று உள்ளதா என்றால் உள்ளது. ஆனால் அந்த 1 லட்சம் ரூபாய் ரொக்கமாக கொடுக்கப்படவில்லை என்றாலும் அதுவும் வங்கி பண பரிவர்த்தனை மூலமாகத்தான் 2ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். அதனால் அந்த தொகை ரொக்கமாக கொடுக்கப்படவில்லை என்றால் சரி வங்கி பரிவர்த்னை மூலம் கொடுக்கப்பட்டது. வழக்குரையில் 31.08.2011ல் ரூபாய் 45 ஆயிரம் என்றும் 13.11.2011ல் ரூபாய் 10004.78 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. சீத்தாலட்சுமி அன்பரசியின் மகள். வாசாஆ 3 ஆவணத்தில் கண்டுள்ள சொத்து அன்பரசிக்கு சொந்தமான சொத்து அல்ல என்றால் சரி. அது அவரது கணவரின் சொத்து அவர் சென்னையில் இருந்ததால் அவரது மனைவி எழுதிக்கொடுத்தார். 03.08.2012 தேதிவரை கொடுத்த தொகைக்காக வாசாஆ 3 ஆவணத்தை எழுதிவாங்கினேன் என்றால் சரி. வாசாஆ 3 ஆவணம் என் பெயரில் ஏற்படவில்லை என்றாலும் 2ம் வாதி பெயரில் ஏற்பட்டது என்றால் சரி. வாசாஆ 3 ஆவணம் பஞ்சாயத்தில் எழுதி வாங்கப்பட்டதா என்றால் இல்லை. வாசாஆ 3 ல் கண்ட நிலத்தை 2017 வரை நான் அனுபவித்து வந்தேன் என்றால் சரி. வாசாஆ 3 ல்

கே. அன்பரசன்

கண்டுள்ள சர்வே நம்பர் 254/2ல் பிரதிவாதிகளுக்கு ஒன்றரை ஏக்கர் சொத்துதான் உள்ளது. பாக்கியுள்ள 50 செண்ட் நிலம் யாருடையது என்றால் கல்யாணியம்மாள் என்பவருக்கு சொந்தமான சொத்து. வாசாஆ 3 ஆவணத்தில் கண்டுள்ள சொத்து தற்போது என் அனுபவத்தில் இல்லை என்றால் சரி. அந்த சொத்தின் அனுபவம் எப்போது பிரதிவாதிகளிடம் போனது என்றால் கட்டப்பஞ்சாயத்து நடந்த பிறகு 2017 ம் வருடம் பிரதிவாதிகள் வசம் போனது. நான் 2017ல் போக்கிய பத்திரத்தின் படி சொத்து வேண்டும் அல்லது பணம் வேண்டும் என்று கேட்டேனா அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. காவல் துறையில் புகார் கொடுத்தேன். பிரதிவாதிகள் போலிசாரிடம் அந்த ஆவணத்தை தாங்கள் எழுதிக்கொடுக்கவில்லை என்று சொல்லிவிட்டார்கள் என்றாலும் அதனால் போலிசார் கோர்ட்டில் பார்த்துக்கொள்ளும்படி சொன்னார்களா என்றால் ஆமாம். அவ்வாறு சொன்னது 2017 ஆம் ஆண்டு என்றால் ஆமாம். வாசாஆ 3 மோசடியான ஆவணம் என்றால் சரியல்ல. வாசாஆ 3 ஆவண காலகட்டத்தில் 2ம் வாதி இந்தியாவில் இருந்தாரா என்றால் இல்லை. வாசாஆ 3 ஆவணத்தை தவிர வேறு எதாவது ஆவணம் பிரதிவாதிகளிடம் தொகை கொடுத்ததற்கு நான் எழுதி வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. என் தாயார் தெற்கு கார்குடியில் வசித்து வந்தார். 2011 முதல் 2017 வரை தெற்கு கார்குடி கிராமத்தில் புதிய வீடு நாங்கள் கட்டினோமா கிரஹபிரவேசம் நடந்ததா என்றால் இந்த வருடம் தான் கட்டினோம். 2013க்கு பிறகு 2ம் வாதி மாப்படுகையில் எனக்கு வங்கி மூலம் பணம் அனுப்பினார் நான் காம்ப்ளக்ஸ் கட்டினேன். அதை தாக்கல் செய்யமுடியும் என்றால் முடியும். அதை தாக்கல் செய்யவில்லை என்றால் தற்போது தானே கேட்கிறீர்கள். வழக்குரையில் குறிப்பிட்டுள்ள

கு. அன்புதாஸ்

தொகைகள் முழுவதும் 2ம் வாதியால் பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்டது என்றாலும் அதில் எந்த தொகையும் என்னுடையது இல்லை என்றால் சரி. என் மூலமாகத்தான் பிரதிவாதிகளுக்கு கொடுத்தேன். அந்த தொகை அவர் கொடுத்த தொகை அவருக்குதான் வரவேண்டும் என்றால் சரி. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. வழக்குரையில் கண்டுள்ள தொகைகள் அனைத்தும் குணசேகரனுக்கு வீடு கட்டுவதற்காகவும் தாயார் மருத்துவ செலவிற்காகவும் அனுப்பப்பட்டவை என்றால் சரியல்ல. சீத்தாலட்சுமிக்கு தொகை அனுப்பப்பட்டபோது அவர் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தாரா என்றால் ஆமாம். அன்பரசிக்கு வங்கி கணக்கு உள்ளது என்றால் சரி. சீத்தாலட்சுமிக்கு தொகை அனுப்பும்போது என்ன வயதிருக்கும் என்றால் தெரியவில்லை. 2017 ல் போலிசில் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளும்படி சொன்னபிறகு ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் கொரோனா வந்துவிட்டது. வாசாஆ 3 ஆவணம் எழுதிக்கொடுத்து மூன்று வருடம் முடிந்து விட்டது என்று பிரதிவாதிகள் சொல்லிவிட்டார்கள். எந்த வருடம் அப்படி சொன்னார்கள் என்றால் 2017 ல் சொன்னார்கள். இந்த வழக்கில் தாவா சொத்துக்களை கிரயம் செய்து கொடுக்க வேண்டும் என்ற பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரி. தாவா சொத்து சம்பந்தமாக என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சொத்தை கொடு அல்லது பணத்தை கொடுங்கள் என்று கேட்டுள்ளேன். குணசேகரனை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கபோகிறோமா என்றால் விசாரிக்கிறோம். இங்கு தான் அவர் இருக்கிறார். தாவா தொகைகள் அன்பழகனுக்கு சேரவேண்டிய தொகை இல்லை என்றாலும் குணசேகரனுக்கு சேரவேண்டிய தொகைகள் என்றால் சரி. குணசேகரன் இதுபோல் நான் பணம் அனுப்பியுள்ளேன்

K. அன்பழகன்

அதை திருப்பி தரவேண்டும் என்று நோட்டீஸ் அனுப்பியிருக்கிறாரா என்றால் அவர் வரமுடியாத நேரத்தில் நான் தான் நோட்டீஸ் அனுப்பினேன். அவர் அனுப்பவில்லை. 5 கோடி ரூபாய் நஷ்ட ஈடு கேட்டு அனுப்பிய நோட்டீஸ் என்னிடம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றால் தாக்கல் செய்யலாம். வழக்குரையில் கண்டுள்ள தொகைகள் அனைத்தும் தாவா சொத்து சம்பந்தமாக கொடுக்கப்பட்டவை இல்லை என்றாலும் கடனாகவும் பெறப்படவில்லை என்றாலும் குணசேகரனுக்கு வீடு கட்டவும் என் தாயாரை பராமரித்து மருத்துவ செலவு செய்ய அனுப்பப்பட்ட தொகைகள் என்றால் தவறு. என் சகோதரர் ரத்தினவேல் உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக இருக்கிறார் என்றால் சரி. 5 கோடி ரூபாய் நஷ்ட ஈடு கேட்டு எந்த வழக்கறிஞர் மூலம் நோட்டீஸ் அனுப்பினேன் என்றால் அவர் சென்னை வழக்கறிஞர் பெயர் மறந்து விட்டது. குணசேகரனுக்கு நாகலிங்கம் என்று ஒரு அண்ணன் உள்ளாரா என்றால் இருக்கிறார். பாகப்பிரிவினை செய்திருக்கிறார். நாகலிங்கத்திற்கு திருமணம் நடந்துவிட்டது என்றால் சரி 2013 ல் நடந்தது. குணசேகரன் அனுப்பிய தொகை அவரது திருமண செலவுக்கும் செலவிடப்பட்டது என்றால் சரியல்ல. 2013 க்கு பிறகு வாசாஆ 3 ஆவணத்தில் கண்ட சர்வே நம்பரில் குணசேகரனுக்கு சொத்து வாங்கப்பட்டதா என்றால் 2001 ல் என் அப்பா பெயரில் வாங்கப்பட்டது. என் மகன் பெயர் அஜித் என்றால் சரி. அவரது கல்லூரி பீஸ்ம் குணசேகரன் அனுப்பிய பணத்தில் இருந்து தான் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஒயின்ஷாப் திறக்கும்போது கிராம மக்கள் எதிர்த்ததால் மன வேதனை ஏற்பட்டு அவர்களை பழி வாங்கும் நோக்கத்தில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளிடமிருந்து சொத்தை அபகரிக்க அல்லது பணம் பெறும் நோக்கத்துடன் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

கெ. அன்புமணி

என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து ...திர்மனுதாரர்கள் ... சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு ... சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

6/3/25